**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, TIRUMANGALAM**

**Case No: CC. 101/2018**

**Prosecution Witness : 2**

| | | | |
|---|---|---|---|
| Name | : மாரியப்பன் | Caste | : |
| Father‘s Name | : | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

(Accused present)
**16.02.2024**
**முதல் விசாரணை**

நான் வில்லூரில் குடியிருந்து வருகிறேன். நான் வில்லூரில் டீ கடை வைத்து நடத்தி வருகிறேன். அ.சா.1 சங்கரேஸ்வரி எனது மகள் ஆவார். ஆஜர் எதிரி பழனிவேல் எனது சம்மந்தி ஆவார். சுரேஷ்குமார் எனது மருமகன் ஆவார். பரமேஸ்வரி எனது சம்மந்தி ஆவார். மற்ற இரண்டு பேர் எனது மருமகனின் சகோதரிகள் ஆவார்.எனது மகள் சங்கரேஸ்வரிக்கும் சுரேஷ்குமாருக்கும் 2015 வது வருடம் 7 வது மாதம் நிச்சயதார்த்தம் நடைபெற்றது. நிச்சயதார்த்தத்திற்கு நான் 1 1/2 லட்சம் செலவு செய்தேன். 09.09.2015 அன்று வில்லூரில் வைத்து இரண்டு பேருக்கும் திருமணம் நடைபெற்றது. திருமணத்திற்கு சீதனமாக 25 பவுன் தங்கநகைகளும் 1 லட்சம் ரொக்கமாகவும் இரண்டு லட்சம் மதிப்புள்ள பண்டபாத்திரங்கள் வீட்டு உபயோக பொருட்கள் நான் செய்தேன். திருமணம் முடிந்து எனது மகள் சங்கரேஷ்வரி சுரேஷ்குமாரின் வீட்டில் கூட்டுக்குடும்பமாக வாழ்ந்துவந்தார். திருமணம் முடிந்து 10 நாட்கள் எனது மகளை எதிரிகளின் வீட்டில் கொடுமைப்படுத்த ஆரம்பித்தார்கள்,. எனது மகளை அசிங்கமாக பேசியும் நேரத்திற்கும் சாப்பிடவிடாமலும் எதிரிகள் கொடுமை செய்தார்கள். சிறு சிறு பிரச்சினைகள் ஏற்பட்டுள்ளது. 2016 வது வருடம் எனது மகள் 25 பவுன் நகைகளை எதிரிகள் எடுத்துக் கொண்டுவிட்டார்கள். எதிரி பழனிவேல் கல்லுப்பட்டி வங்கியில் மேற்கண்ட நகைகளை அடகு வைத்து 1 1/2 லட்சம் வாங்கி அவரது வீட்டிலே கடை வைத்து நடத்திவந்தார். சுரேஷ்குமாரும் 1 1/4 லட்ச ரூபாய்க்கு பிச்சை என்பவரிடம் எனது மகளின் நகையை அடகு வைத்து இருசக்கர வாகனம் வாங்கி நித்தியகல்யாணி கணவர் பாலமுருகனுக்கு கொடுத்துள்ளார். இதை கேட்ட என் மகளை எதிரிகள் சுரேஷ்குமார், பழனிவேல், பரமேஸ்வரி, நித்தியகல்யாணி ஆகியோர்கள் சேர்ந்து என் மகளை கொல்ல முயற்சி செய்துள்ளார்கள். பாலில் விஷம் கொடுத்து என் மகளை கொல்ல

முயற்சி செய்தார்கள். என் மகள் மயங்கியதில் பழனிவேல் எனக்கு இரவு 12.30 மணியளவில் மேற்கண்ட தகவலை எனக்கு போன் மூலம் தெரிவித்தார். நான் அவர்கள் வீட்டிற்கு செல்லும் வரை என் மகள் எதிரியின் வீட்டில் மாடியில் மயங்கிய நிலையில் இருந்தார். நான் சென்று என் மகளை 108 ஆம்புலன்சில் விருதுநகர் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக கூட்டிச் சென்றேன். அங்கு 4 நாட்கள் என் மகள் சிகிச்சையில் இருந்தார். பழனிவேலின் மச்சினர் செல்லபாண்டியும் அவரது மனைவி ராணியும் எங்களிடம் சமாதானம் பேசினார்கள். நாங்களும் ஒப்புக்கொண்டு கள்ளிக்குடியில் எனது மகளையும் சுரேஷ்குமாரையும் தனிக்குடுத்தனம் வைத்தோம். தனிக்குடுத்தனத்தில் சுரேஷ்குமார் வாரத்தில் ஒரு முறை தான் வீட்டிற்கு வந்துள்ளார். வீட்டு செலவிற்கு பணம் தரமாட்டார். குடித்துவிட்டு என் மகளை அடித்துள்ளார்- என் மகளின் வீட்டு செலவிற்கு நான் பணம் கொடுத்தேன். நான் என் மகளுக்காக கொடுத்த வாசிங் மெசினை சுரேஷ்குமார் லதா என்பவரிடம் கொடுத்துள்ளார். இதை என் மகள் கேட்டதற்கு சுரேஷ்குமாரின் பெற்றோர்கள் என் மகளின் வீட்டிற்கு சுரேஷ்குமாரை அனுப்பாமல் அவர்களது வீட்டிலேயே வைத்துள்ளார்கள். எனதுமகள் எதிரிகளின் வீட்டிற்கு சென்று ஏன் இவ்வாறு செய்துள்ளீர்கள் என்று கேட்டதற்கு எனது மகளை இங்கே எதற்கு வந்தாய் என எதிரிகள் அசிங்கமாக பேசி என் மகளின் நாத்தனார் நித்தியகல்யாணி என் மகளின் தலையை பிடித்தும் மற்ற எதிரிகள் அடித்தும் கீழே தள்ளியுள்ளார்கள். இங்கே வந்தாள் உன்னை கொன்றுவிடுவோம் என மிரட்டியுள்ளார்கள். இந்த சம்பவம் 2017ல் நடைபெற்றது. சம்பவத்தின் போது என் மகள் 5 மாத கர்ப்பிணியாக இருந்தார். கர்ப்பிணி என்று கூட பார்க்காமல் எதிரிகள் என் மகளை கொடுமை செய்தார்கள். ஒரு வாரம் நாங்கள் பொறுத்து பார்த்தோம். என் மகள் எங்கள் வீட்டில் தான் இருந்தார். எதிரிகள் வீட்டில் யாரும் வராததால் ஒரு வாரம் கழித்து நான் எதிரிகள் வீட்டிற்கு சென்று பிரச்சினை ஆகியுள்ளது. குழந்தை பிறக்கட்டும் பேசிக் கொள்ளலாம் சொல்லி நான் மகளுக்கு போட்ட 25 பவுன் நகையை திருப்பிக் கொடுக்குமாறு எதிரிகளிடம் கேட்டேன். அப்போது எதிரிகள் 5 பேரும் சேர்ந்து என்னை தாக்கி ஜாதிமானுக்கு பிறந்த சட்டப்படி வாங்கிக்கோ என இனி என் வீட்டிற்கு வரக்கூடாது என சொல்லி அனுப்பிவிட்டார்கள். அதன் பிறகு என் மகள் வேறு வழி இல்லாமல் திருமங்கலம் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார். அதில் எதிரிகள் காவல் நிலையத்தில் ஆஜராகி என் மகளை தங்கள் வீட்டிற்கு அழைத்து செல்வதாக கூறினார்கள். 3 நாட்கள் கழித்தும் கூட்டிச் செல்வதாக பழனிவேல் கூறினார். 3 வது நாள் எனது மகளை விவாகரத்து செய்வதற்கான அறிவிப்பு வந்தது. மறுபடியும் காவல் நிலையம் சென்று காவல் நிலையத்தில் என் மகள் எதிரிகள் காவல் நிலையத்தில் சொன்னதுபோல் என் மகளை அழைத்து செல்லாததால் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார். போலிசார் வழக்கு பதிவு செய்யவில்லை. எனவே நாங்கள் மதுரை மாவட்ட

காவல் கண்காணிப்பாளரிடம் சென்று சம்பவம் பற்றி புகார் கொடுத்தோம், அதன் பிறகு போலிசார் வழக்கு பதிவு செய்தார்கள். போலிசார் என்னை விசாரித்தனர்.

**எதிரி தரப்பில் கு.வி**

போலிசார் விசாரணையின் போது என் மகளின் நகைளை அடகு வைத்து வில்லூரில் 2ம் எதிரி கடை வைத்ததையும் 1வது எதிரி இருசக்கர வாகனம் வாங்கி 4 வது எதிரியின் கணவருக்கு கொடுத்ததை சொன்னேனா என்றால் சொல்லியுள்ளேன். அ.சா.1 மருந்து குடித்த விபரம் எனக்கு நேரடியாக தெரியுமா என்றால் தெரியாது. 2வது எதிரி தகவல் சொல்லி தான் தெரியும். என் மகளும் மருமகனும் சேர்ந்து விஷம் குடிப்பதாக பேசி என் மகள் மட்டும் குடித்ததாக சொல்லும் விஷயம் பொய்யானது என்றால் சரிதான். முதலில் ஒரு புகார் கொடுத்தோம். பின்பு 2 வாரத்தில் 2 வது புகார் கொடுத்தோம் என்றால் சரிதான். இரண்டு புகாரிலும் சம்பவங்கள் மாறுபடாது என்றால் சரிதான். என்னுடைய மகள் முதலில் கொடுத்த புகாரில் அவரும் அவரது கணவரும் சேர்ந்து தான் விஷம் அருந்தியதாக சொல்லியிருந்தால் என் மகள் பொய் சொல்லியிருப்பதாக எடுத்துக் கொள்ளலாம் என்றால் சரிதான். சம்பவத்தை நான் நேரில் பார்க்காததால் என் மகள் சொல்லி தான் எனக்கு தெரியும் என்றால் சரிதான். எனவே என் மகள் கணவரோடு சேர்ந்து விஷம் குடித்தாரா எதிரிகள் விஷயத்தை ஊற்றினார்களா என்று எனக்கு தெரியாது. 29.05.2017 ம் தேதி எதிரிகள் என் மகளை தாக்கியதாக சொல்லியிருப்பது முதலாவது கொடுத்த புகாரிலா அல்லது இரண்டாவது கொடுத்த புகாரிலா என்றால் முதலில் கொடுத்த புகாரில் தவறு இருந்ததாலும் எதிரிகள் அ.சா.1 ஐ கூட்டிக் கொண்டு செல்வதாக சொன்னதாலும் அதனை எதிரிகள் செய்யாததால் இரண்டாவது புகாரை கொடுத்தோம். அதில் நடவடிக்கை எடுக்காததால் நாங்கள் மதுரை காவல் துறை கண்காணிப்பாளர்களிடம் எழுத்து மூலமான புகார் கொடுத்தோம். பின்பு கண்காணிப்பாளர் காவல் நிலையத்தில் புகார் கொடுக்க சொன்னார். நாங்கள் எழுதிக் கொடுத்த புகாரை கண்காணிப்பாளர் அலுவலகத்தில் வைத்துக் கொண்டார்கள். பின்பு நாங்கள் திருமங்கலம் அனைத்து மகளிர் காவல் நிலையம் வந்து நாங்கள் புகார் எழுதிக் கொடுத்தோமா அல்லது எஸ்பி அலுவலகத்தில் இருந்து புகார் வந்திருந்ததா என்று எனக்கு தெரியாது. நான் எஸ்பி அலுவலகத்தில் கொடுத்த புகாருக்கு சாட்சியம் அளித்துள்ளேன். நான் நகையை கேட்டுப்போனதாகவும் அப்போது எதிரிகள் என்னை தாக்கியதாகவும் போலிசாரிடம் சொன்னேனா என்றால் சொன்னேன். வில்லூர் போலிசார் அதை ஏற்க மறுத்துள்ளார்கள். நான் சொன்னது போல் சொன்னவிதத்தில் எந்த சம்பவம் நடைபெறவில்லை என்று சொன்னால் சரியல்ல. நகைகள் அனைத்தும் என் மகளிடம் தான் உள்ளது என்றால் சரியல்ல. அதை என் மகள் முதலில் கொடுத்த புகாரிலே ஒத்துக் கொண்டுள்ளார் என்று சொன்னால் சரியல்ல. அதனால் நடக்காத சம்பவத்தை

வைத்து எதிரிகளை பழிவாங்க வேண்டி அ.சா.1 ஆடம்பரமாக வாழவேண்டி இந்த புகார் கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல.